4. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 41(3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட் காரியங்களைக் கொண்டுவரக்கூடாது என்பதைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

(அ) கோவை மாவட்டத்தில் சில கிராமங்களில் குழாய் கிணறுகளிலிருந்து பம்பு செட்மூலம் தண்ணீர் எடுப்பதால் தண்ணீர்ப்பஞ்சம்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : பேரவைத் தலைவர் அவர்களே சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை, மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

"கோவை மாவட்டத்தில் பூளுவப்பட்டி கிராமத்திலும், மத்வராயபுரம் மாதம் பட்டி இன்ன பிற கிராமத்திலும் நொய்யலாற்றின் கரைகளில் குழாய்க் கிணறுகள் தோண்டி மிகச் சக்தி வாய்ந்த பம்பு செட்டுகள் வைத்துத் தண்ணீர் உறிஞ்சுவதால் அப்பகுதியிலுள்ள ஜனங்களுக்கும் கால்நடைகளுக்கும் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் இருப்பதால் அந்நிலையைப் போக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியம் ."

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஐந்தாண்டுக் கால அளவில் படிப்படியாக நில நீர் வாய்ப்புக்களை விரிவாக ஆராயவும், புலனாய்வு நடத்தவும் 1967 ஜூலையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மாடம்பட்டி, மாதவ புரம், இருட்டுப்பள்ளம், கிராமங்களில் ஆய்வுத் துளைகளை இட்டுப் பொதுப்பணித் துறை இப்பணியைத் தொடங்கியது. மேலே சொன்ன சோதனைத் துளைகள் அனைத்திலும் பணி நடந்து வருகிறது. இதுவரையில் இந்தத் துளைகள் எதிலும் நீர் ஊற்றுக்கள் வெளிவரவில்லை.

கோயம்புத்தூர் நகராட்சியின் நீர் வழங்குதலில் ஏற்படும் நெருக்கடியைச் சரிசெய்யும் அவசர நடவடிக்கையாக குமாரசாமி, செல்வ சிந்தாமணி ஏரிகளில் புதிய துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு வருகின்றன.

இந்தச் சோதனைத் துளைக் கிணறுகளிலிருந்து நில நீர் எத்தகைய சிறப்பான பயனுக்குப் பயன்படுத்தப்படுமென்பது இச் சோதனைத் துளைக் கிணறுகள் முடிவடைந்ததும் நடத்தப்படவிருக்கும் நீரின் அளவு, நீரின் இயல்பு குறித்த சோதனைகளைப் பொறுத்ததாகும். இந்தக் கிணறுகளிலிருந்து பெருமளவு நீரையோ அல்லது நல்ல தரமான நீரையோ எதிர்பார்ப்பது இப்போதைக்கு இயலாத ஒன்றாகும். இந் நீர் குடிப்பதற்கு ஏற்றதென்று கொண்டால் கோயம்புத்தூர் நகராட்சியில் இந்த ஆண்டு ஏப்ரல் மே மாதங்களில் வழங்கப்படக்கூடிய நீரின் அளவு சுமார் 10 முதல் 12 மில்லியன் கன அடியாகும். இந்த நீர் அளவு 50 முதல் 60 ஏக்கர் நிலத்திற்கு மட்டுமே பாசனம் அளிக்க முடியும். இந்த வடி நிலத்தில் 20,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் உள்ளன என்பதைக் கருதிப்பார்க்கும்போது இது மிகக் குறைந்த அளவேயாகும். கோயம்புத்தூருக்கு நீர் வழங்க நீர்த் தேக்கத்திலிருந்து நீரை விசையேற்றம் மூலம் இறைப்பதற்குச் செலவு குறையுமாதலால் நீண்டகாலப் பயனுக்குத் துளைக் கிணறுகளிலிருந்து நீரை இறைப்பது கைவிடப்படலாம். சோதனைக் கிணறு